513

காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

மலர் - 1 -

இதழ் . 32



21.3.65

நினைவாற்றல்

நம்மால் இயலாது என்று சாதாரணமாய் நினைக்கக்கூடிய நினைவாற்றல் அற்புதங்களை நம்மில் பலரும் செய்து காட்டக்கூடும் என்று மன இயல் அறிஞர்கள் ஒரே குரலில் கூறுகிறார்கள். சாதாரண மனிதனுக்குப் பெயர்கள் ஞாபகத்துக்கு வருவதில்லை. பார்த்த முகங்களும் முன் அறிந்த செய்திகளும் புள்ளி விவரங்களும் நினைவுக்கு வருவதில்லை. இதற்கு என்ன காரணம்? ஞாபகத்தில் இருத்தி வைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லாததுதான். ஞாபகம் இருந்தால் தான் வாழ்வு என்று ஏற்பட்டுள்ள விஷயங்களில் நமக்குஉள்ள ஞாபக சக்தி வியப்பு ஊட்டக் கூடியது.

வீட்டுக்கு வீடு பால் கொண்டு கொடுப்பவன் ஒருத்தன் இந்தச் சாதாரண வேலையைத் தன் ஞாபக சக்தியின் உதவி கொண்டு திறமை வேண்டும் ஒரு வேலையாகச் செய்து விட்டான். வாடிக்கைக்காரர்கள் பெயரையும் அவர்கள் முகவரியையும் அப்படி அப்படியே ஒப்பிப்பான் இவன். இந்த ஞாபகசக்திஅவனுக்கு உயர்ந்த வேலையைச் சம்பாதித்துத் தந்தது. ஒவ்வோர் இடத்திலும் 300-முகவரிகள் உள்ள 10 இடங்களுக்குப் பர்த்திப் பால்காரனாக இவனை நியமித்துவிட்டார்கள். இந்த இடங்களில் எந்தப் பால்காரனாவது ஏதாவது காரணத்தைக் கொண்டு வேலைக்கு வரவில்லையென்றால், அவன் இடத்தில் இவன் செல்லுவான். இந்த வேலை உயர்வால் இரட்டிப்புச் சம்பளம். எழுத்தளவில் எந்தவிதக் குறிப்பும் வைத்துக் கொள்ளாமல், 3000 வாடிக்கைக் காரர்களின் பெயர், முகவரி, அவரவர்களுக்கு இத்தனை பால் தேவை என்கிற விவரம்—இவை எல்லாம் இவனுக்குக் கரதலைப் பாடம்.

கணிதத்தில் அற்புதமான காரியங்களைச் செய்யவல்ல போலிஷ் நாட்டு சாலோ ஃபின் கேல்ஸ்டீன் என்பவரின் அதிசய சாதனைகளைத் தான் சற்று எண்ணிப் பார்க்கலாமே! ஒரு சமயம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதிப் பதவிக்கு நடந்த தேர்தலின்போது, ஓட்டுத் தொகைகளைக் கூட்டிப் போடும்படி இவரைக் கேட்டுக்கொண்டார்கள். யந்திர சாதனங்கள் கொண்டு இக் காரியத்தைச் சாதிக்கலாம். யந்திரத்தைவிட அதிவேகமாகக் கூட்டக் கூடியவர் என்றே இவரை அவ்வாறு கேட்டுக்கொண்டனர். 624, 706, 845; 986, 193, 264, 832—இந்த எண்ணை நெட்டுருப் பண்ணிச் சொல்ல நமக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? டாக்டர் ஃபின் கேல்ஸ்டீன் 4-43 விநாடியில் நெட்டுருப் பண்ணி ஒப்பித்தார். எண்ணை வாயால் வாசிப்பதற்கே நமக்கு இதைவிட மிக அதிக நேரம் பிடிக்கும். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவன் ஒருத்தன் உள இயல் அறிஞர்கள் அளித்த விசேஷ பயிற்சிக்குப் பின்னர் இக் காரியத்தை 4-37 வினாடியில் செய்து காண்பித்தான். ஞாபகசக்தியில் தனி நிபுணர் என்று பெயர் வாங்கி இருந்த ஒருத்தரையே அவன் தோற்கடித்துவிட்டான். இத்தகைய பயிற்சி அளிக்கப்பட்ட இன்னும் சில மாணவர்கள் ஞாபகசக்தி குறைவாய் உள்ளவர்கள் ஒன்றும் செய்வதற்கில்லை என்று கருதப்பட்டு வந்த கொள்கைகளைத் தகர்த்துத் தரைமட்டமாக்கி விட்டார்கள்!

மனிதர்களுக்கு உள்ள மனசில் எத்தனையோ தரங்கள்! சிலர் மனசில் படமாய் வரைந்தவை வந்து அப்படியே ஒட்டிக்கொள்ளும். சிலர் மனசில் ஓசை வடிவத்தில் உள்ள செய்திகள் வந்து பற்றிக்கொள்ளும். இன்னும் சிலரது மனம் வாய், நாக்கு இவற்றின் அசைவைக் கொண்டு சங்கதிகளை நினைவில் வைத்துக்கொள்ளும். நம்மில் பெரும்பாலோர்க்கு இது மாதிரி ஏதோ ஒரு திறமை நிச்சயமாய் இருக்கிறது. இந்தத் திறமைக்கு முன்னால் மற்ற திறமைகள் மங்கலாகவே தெரியும்.

எத்தகைய திறமைவாய்ந்த மனமாய் இருப்பினும் சரி, சில பொது விதிகளை அனுஷ்டித்தால் ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்ளலாம். வருங்காலத்தில் பெருங் காரியங்களைச் சாதிக்க இந்த ஞாபகசக்தி பயன்படும்.

முதலாவதாக, பாடம் ஒன்றை நெட்டுருப்பண்ண வேண்டும் என்று வைத்துக்கொள்வோமே. இந்தப் பாடத்தைப் பகுதி பகுதியாக வெட்டிப் பிரித்து, ஒவ்வொரு பகுதியாக நெட்டுருப்பண்ணுவது என்பது சரியான முறையன்று. முழுப் பாடக்

தையும் ஒரேயடியாக உருப்போட வேண்டும். ஆறுசெய்யுள் கொண்ட கவிதை ஒன்றை மனப்பாடம் பண்ண நேர்ந்தால், இரண்டு இரண் டாக இந்த ஆறையும் நெட்டுருப் பண்ணி விடலாமே என்றுதான் நினைக்கத் தோன்றும். இந்த முறை தவருன முறை என்று சோதனை கள் வாயிலாக நாம் அறிகிருேம். கவிதையை முதலிலிருந்து கடைசி வரை முழுவதும் படித்து மனப் பாடம் பண்ணுவதே சுலபம் என்று சோதனைகள் அறிவுறுத்துகின்றன. உருப்போடும்போது, அப்படியே கவிதையை மனத்தில் திணித்து விடுவது என்பது கூடாது. மாலை இரண்டு தடவை விகிதம் ஒரு வாரத் துக்கு இந்தக் கவிதையை வாசித் தால், ஒரே இரவில் 14 தடவைகள் வாசிப்பதைக் காட்டிலும் மனசில் உறுதியாகப் பதியும்.

மனப்பாடம் பண்ணும்போது, வலுக்கட்டாயமான முயற்சி எது வும் கூடாது. அதீத முயற்சி கார ணமாய் உண்டாகும் மனத்தின் முறுக்கேறிய தன்மை கற்கும் முறையில் மந்த்தைப் பிறப்பித்து விடும்.

நம்முடைய ஞாபகசக்தியில் நமக்கு முதலில் தன்னம்பிக்கை இருக்கவேண்டும். "என்னுடைய மனசு ஒரு சல்லடை. எதுவும் என் ஞாபகத்தில் தங்கி நிற்காது என்று சதா சொல்லும் ஒருவன் அந்தச் சல்லடை மனசில் இன்னும் ஓட்டை கள் போடுகிருன்" என்று உள இயல் போதகாசிரியர் ஒருவர் கூறுகிருர்.

ஒரு எண்ணை நினைவில் இருத்திக் கொள்ள ஒரு குறிப்பிட்ட நிறத் தோடு அதைப் பிணைத்துவிட வேண்டும் என்பது போன்ற செயற் கைத் தந்திரங்களைத் தவிர்த்தல் நலம். இந்த மாதிரி முறைகள் ஞாபகசக்தியைத் தாங்கி நிறுத்தும் என்று சொல்லுவார்கள். உண்மை அவ்வாறு இல்லை. எனவே தவிர்க் கத்தான் வேண்டும். இத்தகைய செயற்கைத் தந்திரங்களில் ஒரு சங்கதிக்குப் பதிலாக இயற்கைத் தொடர்பு என்பதே இல்லாத இரு சங்கதிகளை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டி வருகிறது. அத ஞல் மனதுக்கு வீணான சிரமம்; ஆயாசம். ஒரு பெரிய எண்ணை நினைவில் வைத்துக்கொள்ள, அத னைச் சிறு சிறு பகுதிகளாக்கி மனத் தில் வாங்கிக் கொள்ளலாம். இந்த இயற்கை முறையைத்தான் டாக் டர் ஃபின் கேல்ஸ்டீன் அனுஷ்டித்து வெற்றி காணுகிருர். ஒரு பெரிய எண்ணை மும்மூன்று ஸ்தானம் கொண்ட எண்களின் கோவை யாக்கி மனத்தில் நிறுத்தவும். அந்த எண் மூன்று எழுத்து வார்த்தை களின் கோவை மாதிரி ஞாபகத்தில் தங்கிவிடுகிறது. எண்களைக் கொண்டு அவர் நிகழ்த்தும் மாயா ஜாலங்களின் இரகசியம் இதுதான்.

(13-ம் பக்கம் பார்க்க)

புதிய ஹிந்தியின் விபரீதம்

ஆங்கிலம் 1965-ஆம் ஆண் டுக்குப் பிறகும் மத்திய சர்க்கா ரின் துரைத்தன மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண் டிய நிலை குறித்துச் சமீபத்தில் (1963-ல்) தில்லி பாராளுமன்றத் தில் காரசாரமாக விவாதம் நடந் தது. அரசியல் சட்டத்தில் ஆட்சி மொழிப் பகுதியைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. இந்தியப் பார்லிமெண் டின் சரித்திரத்திலேயே முதல் முறையாக அன்று மார்ஷலை அழைத்து ஆங்கில எதிர்ப்பு வெறியர்களைப் பலவந்தமாக வெளியேற்ற வேண்டிய நிர்ப்பந் தம் ஏற்பட்டது!

ஹிந்திவெறியர்கள் தீவிரமாகப் புதிய ஆட்சிமொழி மசோதாவை எதிர்ப்பதற்குக் காரணம் 'இப் போதே (1963-ல்) ஹிந்தியை முழுக்க முழுக்க ஆட்சிமொழி யாக்கவில்லையே; ஆங்கிலத்தை உடனடியாகத் தொலைத்துத் தலை முழுகவில்லையே' என்பதுதான்.

இந்தி வெறியர்களுக்குத் துளி யாவது நடப்பு நிலவரம் தெரிந் திருக்கிறதா, பாருங்கள்: ஹிந்தி பேசாத மாநிலங்களில் ஹிந்தி பொதுஜனத் தொடர்பு மொழி யாகவோ, துரைத்தன மொழி யாகவோ லவலேசங் கூடப் பரவ வில்லை—பரவ அதற்குச் சக்தி யில்லை என்பது ஒருபுறம் இருக் கட்டும்; ஹிந்தி பேசும் ராஜ்யங் களிலாவது நமது ஹிந்தி பாஷை நன்ருய்ப் பரவியிருக்கிறதா? அர சாங்க அலுவல்களுக்கும். தனி யார் துறை நிறுவனங்களுக்கும் ஹிந்தி எவ்வளவுதூரம் பயன் பட்டு வருகிறது? ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் மிகப் பெரியது உத்தரப் பிரதேசம். அங்கே சர்க் கார் அலுவல்களும், பொதுஜன காரியங்களும், கடை-கண்ணி, தொழில் – வியாபார நிறுவனங் களும் அலுவல்களும் ஹிந்தியில் அல்ல. உருது மொழியில்தான் பெரும்பாலும் நடந்து வருகின் றன. இங்கெல்லாம் இன்றுவரை யிலும் ஹிந்திமொழி பொதுமக்க ளிடம் செல்வாக்கும் ஆதரவும் பெற்ற 'பொதுஜன மொழி'யாக அமையவில்லை. இதற்கு மிக முக்கியமான காரணம், நவீன ஹிந்தியை ஸம்ஸ்கிருதத்தைப் போலவே மிகக் கடினமாக்கி வைத்திருக்கிருர்கள். இதே நேரத் தில், உலகப் பொதுமொழியான இங்கிலீஷில் ஆண்டுதோறும் 5,000 சொற்கள் பல்வேறு மொழிகளிலிருந்தும் திசைச் சொற்களாக வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

ஹிந்தி ஆதரவாளர்கள் அதைத் தேசீயக் குறிக்கோளில் உருவாக்கவில்லை; மதப் பிரசார ரீதியில் அமைத்து வருகிருர்கள். ஹிந்தி பேசாத மக்களிடம் இத் தகைய ஹிந்தியைக் கட்டாய மாகத் திணிப்பதன் விளைவு பயங்கரமாகத்தான் முடியும்!

பிரதமர் நேரு, "பாரத தேசத் தின் ஒற்றுமைக்காகவே ஏற்பட் டது தேசீய மொழி, அந்த மொழித் திட்டமே தேசத்தின் ஒற்றுமையைக் குலைக்கக் காரண மாகிவிட்டால், அந்தத் தேசீய (ஆட்சி) மொழித் திட்டத்தையே கைவிட வேண்டியதுதான்!" என்று துணிச்சலுடன் அறிவித் ததைப் பாராட்டவேண்டும்.

மூலம் : ஸரிதா (ஹிந்தி: மே '63), புதுடில்லி.

—'மஞ்சரி'

காஞ்சி

மலர் 1 21—3—65 இதழ் 32

சேலத்து இரும்பு

சேலத்து இரும்பைப் பயன்படுத்தும் வகையில், அங்கு ஒரு இரும்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் இன்றியமையாமைபற்றி இனி புதிதாக எழுத வேண்டியது ஏதும் இல்லை. காட்டவேண்டிய காரணங்களை எல்லாம் காட்டியாகிவிட்டது; சொல்லவேண்டிய முறையில் எல்லாம் சொல்லியாகிவிட்டது. இன்று, சேலத்திலா, இரும்புத் தொழிற்சாலையா, முடியுமா என்று கேட்பவர் யாரும் இலர். நிபுணர் பரிசீலனை இத் திட்டத்திற்குச் சாதகமாக அமைந்துள்ளது. பிற இடங்களில் உள்ளதைவிட, (மிகுதியாக இல்லையென்று வைத்துக்கொண்டாலும்) குறையற்ற முறையில் சேலத்து இரும்பு இலாபமாக இருக்க முடியும் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. இரும்பு உருக்குத் தொழிலுக்குத் தேவையான பிற வாய்ப்புகளும் வசதிகளும் அங்கு நிரம்ப உள்ளன என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை அமைய வேண்டும் என்பது ஒரு கட்சியின் பிரச்சினையாக இல்லை. தமிழக மக்கள் அனைவரும், குறிப்பாகச் சேலம் மாவட்ட மக்கள் அனைவரும் சேலத்து இரும்புக்கு வாழ்வு கிடைக்கவேண்டும் என்று விரும்பி வேண்டுகின்றனர். இதுவரை அமைந்த தொழிர்சாலைகள் வேறு வேறு பகுதியில் அமைந்து, ஒரே பகுதியின் தொழில் வளர்ச்சிக்கே ஆக்கமளித்துவிட்டன. ஆகவே இனி அமையும் ஆலை தென்னகத்தில், சேலத்தில் அமையவேண்டும் என்று விரும்புவதில் நியாயம் நிரம்ப இருக்கிறது. ஒவ்வொரு பருவத்திலும் அமைச்சர்கள் சேலம் பகுதியில் நடைபெறும் ஏதேனும் பொது நிகழ்ச்சிகளில் பங்கு பெறும்போது, சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை வரும், வரும் என்று ஆரூடம் கூறுவது வாடிக்கையாகிவிட்டது. "நல்லகாலம் பொறக்கப் போவுது, பொறக்கப் போவுது" என்று கூறிடும் குடுகுடுப்பைக்காரனுடைய, 'நல்ல காலம்' போல் "வரும் வரும்" என்பது சொல்அளவில் இருந்து வருகின்றதேயன்றிச் செயல் வடிவம் கண்ணுக்குப் புலப்படவில்லை.

திரு. சுப்பிரமண்ணியம் அவர்கள் இரும்புத் துறையமைச்சராக இருந்த போது, சேலத்தில் தொழிற்சாலை வந்துவிடும் என்னும் நம்பிக்கையைத் தோன்றச் செய்யும் வகையில் பல முறை பேசியுள்ளார். தமிழர், தங்கள் நலனில் அக்கறையுடைய ஒருவர் கையில், சேலத்து இரும்புக்கு வாழ்வு இருக்கிறது என்று எண்ணி இருந்தனர். ஆனல் நம்பிகை அளித்த அமைச்சரைவேறு துறைக்குப்பொறுப்பாக்கிஇரும்பை இன்னெருவர் கையில் கொடுத்துவிட்டார் பிரதமர் லால்பகதூர். புதிய இரும்பு அமைச்சர் சஞ்சீவி ரெட்டியார் பேசிய பேச்சுக்கள், எழுந்த நம்பிக்கையை விழச் செய்தன; சேலத்தில் இரும்பாலை என்பது கனவாகிவிடுமோ என்ற ஏக்கமும் தோன்றியது.

நமது மாநில முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இரண்டொரு நாட்களுக்கு முன்னர் பொதுக் கூட்டம் ஒன்றில் 'சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை வரும்' என்று கூறினர். சட்டசபையில் தொழிலமைச்சர் திரு. வெங்கடராமன் அவர்கள், "சேலத்தில் கட்டாயம் இரும்பு உருக்காலை நான்காவது திட்ட காலத்தில் வந்தே தீரும்" என்று கூறியுள்ளார். எந்த அளவுக்கு இந்த வேகம் செயல்படப் போகிறது என்பதைப் பொதுமக்கள் ஆர்வத்தோடு கவனித்து வருகின்றனர்.

டெல்லியிலே உள்ள அமைச்சர்கள் அளித்த வாக்குறுதிகளைக் கடந்து, இப்போது சென்னையில் உள்ள அமைச்சர்கள் வாக்குறுதிகள் அளிக்கும் கட்டம் வந்துள்ளது. ஆனல் வாக்குறுதிகள் இப்போதெல்லாம் அவற்றிற்கான மதிப்பை மக்களிடம் பெறுவதில்லை. ஏனெனில் வாக்குறுதியைத் தருகின்றவர்கள், தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்பதைக் கடமையாகக் கருதக்காணேம். காற்றேடு கலந்துவிடும் வெற்றெலிகளாகவே வாக்குறுதிகள் வாய்க்கின்றன. இது மக்களாட்சி முறையில் ஆபத்தான கட்டம். ஆட்சி முறைக்குமட்டும் அல்ல, தனிப்பட்டவர்களின் வாழ்க்கையிலேயே வாக்குக்கு மதிப்பு இருக்கவேண்டும். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அந்த "நாணயம்" இல்லையேல் வாழ்க்கையில் என்ன ஆதாரம் இருக்கிறது? ஆகவே ஆட்சியில் இருப்போரிடம் நாணயம் மிகுதியாக இருக்க வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை.

நமது மாநில அமைச்சர்கள் வாக்குக்கொடுத்தோமே அதுவேபோதும் என்று இருந்துவிடக்கூடாது. கொடுத்த வாக்குறுதியைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளில் முனைந்து ஈடுபடல் வேண்டும். தொழிலமைச்சர் அத்தகைய முயற்சியில் ஈடுபடுவார் என்ற நம்பிக்கையில், ஈடுபடவேண்டும் என வேண்டுகின்றேம். கண்ணில் தெரியும் காட்சியாகச் சேலத்து இரும்பு உருக்குத் தொழிற்சாலையை ஆக்குங்கள்; கற்பனை கண்கொண்டு காணச்செய்துவிடாதீர்கள்.

தமிழ்நாடு தொழிற்துறையில் வளருகிறது என்பதை வெறும் புள்ளி விவரங்களால் நிரூபித்துக் காட்ட முயலவேண்டாம். இத்தனை தொழிற்சாலைகள் உள்ளன இந்த ஆண்டு இத்தனை புதிய தொழில்களுக்கு 'லைசென்ஸ்' கொடுத்திருக்கிறேம் என்பதுபோன்ற வாதங்களை நம்பி எத்தனை நாளைக்கு வாழ்ந்துவிட முடியும்?

இயற்கை அளித்துள்ள பொருளை இழக்காதீர் சேலத்து இரும்பைப் பயன்படுத்துவீர் என வேண்டுகின்றேம்.

தம்பி

டில்லிக் கடிதம்

புதுதில்லி
11-3-65
நள்ளிரவு

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடம் தொலைபேசி மூலம் பேசி முடித்தவுடன் எழுதுகிறேன்-மாணவர்கள் கல்விக்கூடங்களுக்குச் செல்லாமலிருக்கிறார்கள் என்ற செய்தி அறிந்து வேதனையுடன் எழுதுகிறேன். மொழிப்பிரச்சினையில் இயல்பாகவே அமைந்துவிட்டிருக்கிற சிக்கல்களையோ, இந்திக்கு ஆதரவான அணியினர், ஒரு சாதகமான, சமரசச் சூழ்நிலை எழ விடாதபடி தடுக்க, வன்முறைக் கிளர்ச்சிகளையும், அமளிகளையும் தென்னகம் மேற்கொண்டு விட்டிருக்கிறது என்பதைக் காட்டி வாதாடி, சிக்கலை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதனையோ, மொழிப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, மிகமிக பொறுப்புணர்ச்சியும் பொறுமை உணர்ச்சியும் தேவைப்படுகிறது என்பதனையோ உணரமறுத்து மாணவர்கள் இவ்விதமான போக்கினை மேற்கொண்டிருப்பது, தாங்கிக்கொள்ள முடியாத வேதனை தருகிறது. நாவலர் மாணவர்களுக்கு விடுத்த வேண்டுகோள் இன்று மாலை வானொலி மூலம் அறிந்து ஆறுதல் அடைந்தேன். அவர் கேட்டுக்கொண்டதுபோலவே நானும் மாணவர்களைக் கேட்டுக்கொள்வதாக இதழ்களில் அறிக்கை வெளியிடும்படிக் கேட்டுக்கொண்டேன்,

இங்கு, நான்கு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில், நான் பேசியதில், தொடர்பு பொருத்தம் நீக்கிச் சில பகுதியை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு, முதலமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் பேசியது குறித்தும் அதற்கு மதியழகனும் தாமும் தக்க விளக்கம் அளித்ததுபற்றியும் நாவலர் கூறக்கேட்டேன்.

என் பேச்சிலே துண்டுத் துணுக்குகளைத் தூக்கி வைத்துக்கொண்டு, காங்கிரஸ் தலைவர்கள் விளையாடுவது இது முதல் தடவை அல்ல; ஒவ்வொரு தடவை அவர்கள் இந்த விதமான விளையாட்டிலே ஈடுபடும்போதும், "இதோடு தொலைந்தான் பயல்! இதோடு கழகம் ஒழிந்தது!" என்று எக்களிப்புக்கொள்ளுவதை நாடு நன்கு அறியும்.

"உங்கள் அண்ணாத்துரை இந்திக்கு சம்மதம் தெரிவித்துக் கையெழுத்துப் போட்டு விட்டான், தெரியுமா!" என்று முன்பு ஒருமுறை காங்கிரஸ் தலைவர்கள் மேடை தவறாமல் பேசியது எனக்கு நினைவிலிருக்கிறது. சட்டசபையிலே நான் திட்டவட்டமாக, நான் அவ்விதம் கையெழுத்துப் போட்டேனா? என்று கேட்டபோதுதான், அப்போது அங்கு அமைச்சராக இருந்த சுப்பிரமணியம், "இல்லை! கையெழுத்துப் போடவில்லை." என்று தெரிவித்தார். அது வரையில் ஒரு பத்துநாள், விளையாடிக்கொணடிருந்தார்கள். அதிலே அவர்களுக்கு ஒரு தனிச் சுவை! அனுபவித்துவிட்டுப் போகட்டும்.

மொழிப்பிரச்சினையிலே உள்ள சிக்கலைப்பற்றியும், தமிழகம் கொந்தளித்துக்கொண்டிருப்பதையும், அது குறித்துத் தக்கவிதமான கவனம் செலுத்தாமல், மேல் மட்டத்தில் உள்ள



வர்கள் இருப்பதையும் எண்ணி எண்ணி வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும் எனக்கு, காங்கிரஸ்தலைவர்கள் செய்வதுபோன்ற விளையாட்டிலே ஈடுபடநேரமுமில்லை, நினைப்பும் எழவில்லை.

கிட்டத்தட்ட ஒருமணி நேரம் பேசினேன். பலன்? என்ன கிடைக்கும் என்று எனக்கே தெரியவில்லை. லால்பகதூர் அவர்களின் பேச்சிலே, இதுபற்றி குறியும் தென்படவில்லை; கோடிட்டும் காட்டவில்லை. இந்த நிலை இங்கு, ஆளவந்தார்களின் அணியில்.

ஆனால், முன்பு நான் புதிய திருப்பம் என்ற கட்டுரையில், குறிப்பிட்டுக்காட்டிய 'சூழ்நிலை' பொதுவாகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுகளில் தெரிகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு உள்துறை அமைச்சர் நந்தாவைக் கண்டு, மொழிப்பிரச்சினையில், ஒரு நல்ல தீர்வு கண்டாகவேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறார்கள். இரண்டொருவர் அதுபற்றி என்னிடமும் பேசினார்கள் நம்பிக்கையுடன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்தச் சமயம் பார்த்து அழித்துவிட, காங்கிரசிலே சிலர் துடியாகத் துடிக்கிறார்கள் என்பதற்கும் குறிகள் தென்படுகின்றன.

மாநிலங்கள் அவையிலே நான் பேசியதன் முழு வடிவம் கிடைக்கப் பெற்றிருக்கக்கூடும் என்று நம்புகிறேன். இந்தியாவின் பல பகுதிகளிலும் உள்ள இதழ்கள் கூடுமானவரையில் இந்தப் பேச்சை வெளியிட்டிருக்கின்றன — அந்தந்தப் பத்திரிகை மேற்கொண்டிருக்கும் கொள்கைப் போக்கிற்கு ஏற்ப தலைப்புகளிட்டும்-வெட்டிஒட்டியும்-வெளியிட்டன. இதுஇயற்கை என்பது புரிவதால் எனக்கு எரிச்சல் எழவில்லை.

முதலமைச்சர் அளிக்கும் விளக்கம், சில இதழ்களில் முதலமைச்சரின் உறுதி என்ற தலைப்பிலும், வேறு சில இதழ்களில் முதலமைச்சரின் பிடிவாதம் என்ற தலைப்பிலும் வெளிவருவது காண்கிறோம் அல்லவா; அதுபோல, அவரவர்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற தலைப்புகளுடன், என் பேச்சை இதழ்கள் வெளியிட்டுள்ளன; ஆனால் ஒரு இதழும், அடியோடு இருட்டடிப்புச் செய்துவிடவில்லை.

இந்தப் பேச்சினால் ஏற்பட்ட சமாதான சூழ்நிலை காரணமாகத்தான் பத்திரிகை நிருபர்கள், மாநாடு நடத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

பத்திரிகை நிருபர்கள் மாநாடு என்றால், நாம் சொற்பொழிவு நடத்த நடத்த, நிருபர்கள் குறிப்பு எடுத்து, இதழ்களில் வெளியிடுவது என்பதல்ல. பல இதழ்களின் நிருபர்கள் வருகிறார்கள்; கேள்வி மீது கேள்வியாகத் தொடுத்தபடி இருக்கிறார்கள்; அவற்றினுக்கு நாம் அளிக்கும் பதில்களைக் குறித்துக்கொண்டு போய், தத்தமது இதழ்களில் எந்தப் பகுதி தமக்குத் தேவை என்று அவர்களுக்குத் தென்படுகிறதோ அவைகளை வெளியிடுகிறார்கள்.

அன்று நடத்த நிருபர்கள் மாநாட்டில், எனக்குத் துணையாகத் தோழர் செழியன் இருந்தார்; அவருடைய இல்லத்தில்தான் நடைபெற்றது மாநாடு.

முப்பது நிருபர்கள் இருக்கும் வந்திருந்தவர்கள்; ஒரு மணி நேரத்திற்கு அதிகமாகவே நடைபெற்றது.

இத்தகைய நிருபர்கள் மாநாட்டில், மடக்குவது, குறுக்கிடுவது, போன்ற முறைகளில் தேர்ச்சி பெற்ற நிருபர்களிடம், மிகத் தெளிவாகவும் அதிகமான பர பரப்பு காட்டாமலும் பேசவேண்டும். அன்று நான் நடந்துகொண்ட முறை குறித்து விவரமறிந்தவர்கள் பாராட்டியது கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் நான் அப்போதே, திருமதி. செழியனிடம் சொன்னேன், "எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தமிழ் நாட்டில் சில இதழ்கள், அண்ணாத்துரை இந்தியைப் பரப்ப ஒத்துக் கொண்டான்" என்று மட்டும் வெளியிடும் ,பாருங்கள்" என்று சொன்னேன். இதழ்களின் போக்கு எனக்கும் தெரியுமல்லவா! நானும் ஒரு பத்திரிகை நடத்துபவன் தானே!! நான் கூறியபடியேதான் சில இதழ்கள் வெளியிட்டன. முதலமைச்சர் பக்தவத்சலமும் அதை வைத்துக்கொண்டுதான், பேசியிருக்கிறார் என்று தெரிகிறது.

இதுவும் ஒரு நல்லதற்கே பயன்படுகிறது; ஏனெனில், அன்று நடைபெற்றது முழுவதையும், எழுத ஒரு தூண்டுகோல் கிடைத்திருக்கிறது! நிருபர்கள், எவரெவர், என்னென்ன கேள்விகளை, என்னென்ன நோக்கத்துடன் கேட்டனர் என்பதனையும், அவற்றினுக்குப் பதில் அளிக்கும் முறையில் நான் என்னென்ன கருத்துக்களை எடுத்துக் கூறினேன் என்பதனையும் கூறிக் கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு.

இந்து இதழிலே மட்டும், குத்திக் கிளறி ஒரு நிருபர் கேட்டபோது அரைகூவலாக அண்ணாத்துரை, இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதை சர்க்கார் விட்டு விட்டு, சர்க்கார் முன்னின்று இந்தி பரப்புவதை விட்டு விட்டு, மக்களின் அமைப்பே இந்தியைப் பரப்ப முனைந்து, என் உதவியை நாடினால், செய்கிறேன் என்று கூறினார் என்று வெளியிட்டிருக்கிறது.

இந்து வெளியிட்டிருக்கிற முறையிலிருந்து, (1) சர்க்கார் இந்தியை ஆட்சி மொழியாக்குவதை விட்டு விடவேண்டும் (2) இந்தியைப் பரப்ப சர்க்கார் முனையக் கூடாது என்பவைகளை நான் வலியுறுத்தி இருப்பது நன்கு விளங்கும்,

நமக்குத் தேவை, (1) இந்தி ஆட்சிமொழி ஆக்கும் முயற்சியை சர்க்கார் கைவிட்டுவிட வேண்டும் என்பது (2) இந்தியைப் பரப்ப சர்க்கார் தனி அக்கறை காட்டும் போக்கும் நிறுத்தப்படவேண்டும் என்பது. இந்த இரண்டும் சர்க்காரால் கைவிடப்பட வேண்டும்; ஐயா! இதனைச் செய்ய உம்மால் முடிந்து, செய்துவிட்டு வந்தால், பிறகு இந்தி பரப்புவதற்கு உதவி கேளும், செய்கிறேன் என்று நான் கூறியிருக்கிறேன்.

என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்ட நிருபர், சாஸ்திரி சர்க்காரிடம் பேசி, இந்தி ஆட்சி மொழி ஆக்கும் திட்டத்தைக் கைவிட்டுவிடச் செய்யவேண்டும் முதலில்! செய்கிருரா பார்ப்போமே!! அந்த முறையில், **I will take up the challenge** நான் அந்த அறை கூவலை ஏற்றுக்கொள்கிறேன் என்ற முன்னுரையுடன் நான் பேசினேன். இதைவிடத் தெளிவாகப் பேசியிருக்க முடியாது என்றும் நம்புகிறேன். இதனை வைத்துக்கொண்டு முதலமைச்சராகட்டும், மற்றவர்களாகட்டும், வேடிக்கை பேச என்ன காரணம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. போகட்டும். எத்தனையோ விதமான கலக்கத்தில் சிக்கிக் கிடப்பவர்களுக்கு, என் பேச்சு, சில விநாடி வேடிக்கைக்குப் பயன்படுவது பற்றி மனக்குறை கொள்வானேன். நடந்தது முழுவதையும், அறிந்துகொள்ளும் வாய்ப்புப் பெறுபவர்கள், உண்மையை அறிந்துகொள்வார்கள்.

இந்தி எதிர்ப்பு இயக்கம் நடத்திடத் தொடங்கிய நாள்தொட்டு, நாம் தெளிவாக, ஒன்று கூறிவருகிருேம்; எங்களுக்கு எந்த மொழி மீதும் வெறுப்பு இல்லை' இந்தியை நாங்கள் அந்த விதத்தில் எதிர்க்கவில்லை; அது இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக்கப்படுவதைத்தான் நாங்கள் எதிர்க்கிருேம் என்பதனை திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிருேம்.

நமது கழகத்தின் தீர்மானம் தேசீய மொழிகளெல்லாம் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்பதாகும். அந்தப் பதினுன்கு மொழிகளில் இந்தியும்ஒன்று.

இந்தியை அந்தப் பதினுன்கு மொழிகளில் ஒன்று என்று கொள்ளமாட்டோம்; கொள்ளக்கூடாது என்று நாம் சொன்னதுமில்லை; சொல்லப்போவதுமில்லை; சொல்லுவதில் நியாயமுமில்லை.

நாம் சொல்லி வருவதெல்லாம், இந்தி, இந்தியாவின் ஒரு பகுதியினரின் தாய்மொழி, அதனை இந்தியாவின் ஆட்சிமொழி என்று ஆக்குவது அடாது, ஆகாது, பெரும் தீது; அது இந்தி பேசாத மக்களை அநீதிக்கு ஆட்படுத்தும், இரண்டாந் தரக் குடிமக்களாக்கும், ஆகவே அதனை ஒப்பமாட்டோம், எதிர்க்கிருேம்' என்பதாகும்.

இந்த அடிப்படை மாருது என்பது மட்டுமல்ல, நாம் மட்டுமே கூறிக்கொண்டு வருகிற இந்த அடிப்படையை இன்று வேறு பலரும் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டிருக்கிருர்கள்.

நான், மாநிலங்கள் அவையில் பேசியானதும், பிற்பகல், இந்தியின் தீவிரக் கட்சியான ஜனசங்கத்தைச் சார்ந்த வாஜ்பாய் பேசினுர்; அவர் என்னையும் நான் சொன்ன கருத்துக்களையும், பலமாகத் தாக்குவார் என்ற நப்பாசை பலருக்கு இருந்தது.

அவரோ, அண்ணுதுரை சொல்லுகிற பதினுன்கு தேசீய மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற திட்டத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன், என்று பேசினுர்.

வாஜ்பாய், மாறுபட்டது எதிலே என்ருல், 14-மொழிகளும் ஆட்சி மொழிகளாகக் காலம் பிடிக்கும்; அதுவரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்கட்டும், என்பதிலேதான். அவருடைய கருத்து இப்போதே 14-மொழிகளும் ஆட்சிமொழிகளாகி விடட்டும், ஆங்கிலம் அகற்றப்படட்டும் என்பது.

இதிலே நமக்கு என்ன ஆட்சேபம்! நாளைக்கே நமது தமிழ் மொழி, இந்தியாவின் ஆட்சி மொழியாகி அரியணை ஏறிஞல், ஆங்கிலம் நமக்கு ஆட்சிமொழியாக இருக்கவேண்டிய தேவை என்ன இருக்கிறது!

இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்கப்பட வேண்டும் என்ற சர்க்கார் கொள்கை விடப்பட்டு, இந்திக்காகச் சர்க்கார் பணம் செலவிட்டு, பரப்பும்முயற்சியை நிறுத்திக்கொண்டு, பதினுன்கு மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகள் என்று சட்டமாக்கப்பட்டு, அதன்படி நமது தமிழ் மொழி ஆட்சி மொழி என்ற நிலைபெற்று, பிறகு இந்தியைப் பரப்ப, மக்கள் அமைப்பு முயற்சி எடுத்துக் கொள்ளும்போது என் உதவி கிடைக்குமா என்று என்னை ஒருவர் கேட்கும் போது, கிடைக்கும் என்று கூறுவதிலே என்ன தவறு காண்கிருரோ முதலமைச்சர்; எனக்குப் புரியவில்லை.

அந்த நாள் வருகிறபோது, இந்தியை இங்குப் பரப்பும் முயற்சி மட்டுமல்ல, தமிழ்மொழியைப் பிற இடங்களில் பரப்பும் முயற்சியும் நடந்துவரும்.

இப்போதே, தென்னக மொழிகளில் ஒன்றை, இந்தி மாநிலத்தவர் படித்துக்கொள்ளவேண்டும்

விற்பனையாகிறது!

அண்ணுவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம் ரூ. 1-50

அரசாண்ட ஆண்டி ரூ. 1-50

மதுரைக்கு டிக்கட் இல்லை ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

என்று பேச்சு எழவில்லையா! நானே கூடச் சொன்னேனே, மாநிலங்கள் அவையில் பேசும்போது, தமிழ் கற்று, அம்மொழியில் உள்ள இலக்கியச் சுவையைப் பருகினுல், வாஜ்பாயேகூட, தமிழ்தான் தொடர்பு மொழியாக இருக்கவேண்டும் என்று ஏற்றுக்கொள்ளுவார் என்று. உடனே அவர் என்ன துள்ளிக்குதித்தெழுந்து, "முடியாது!! முடியாது! அப்போதும் தமிழ் மொழியைத் தொடர்பு மொழியாக ஏற்றுக்கொள்ள முடியாது" என்ரு பேசினுர்? இல்லை! ஏன்? வாதங்களின் பொறுத்தத்தையும், நிலைமை விளக்கத்துக்கான பேச்சின் பொருளையும் உணருபவர்கள், முதலமைச்சர் காட்டும் போக்கினைக் காட்டமாட்டார்கள். ஆனல் முதலமைச்சர் இப்போது உள்ள நிலைமையில், நான் அவரிடம் அதிக அளவு நிதானத்தன்மையை எதிர்பார்ப்பதற்கில்லை.

நிருபர்கள் மாநாட்டிலேகூட ஒரு நிருபர், பதினுன்கு மொழிகளும் ஆட்சிமொழிகளாக்கப்பட்டு, பிறகு காலப்போக்கில், மக்களின் முயற்சியால், சர்க்காரின் பலமின்றி, ஒரு மொழி தொடர்பு மொழியாகட்டும் என்று கூறுகிறீர்களே, அந்தக்காலம் வரும்போது மக்கள் வளமுள்ள மொழியாகப் பார்த்துத்தானே தொடர்பு மொழியாகக்கொள்வார்கள் என்று கேட்டபோது நான், "ஆமாம்! வளமுள்ள மொழியைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். அதனுல்தான் சொல்கிறேன், தமிழ் மொழியைத் தொடர்பு மொழியாகக்கொள்ளுங்கள் என்று. அது தொன்மையான மொழி—வளமான மொழி" என்று கூறினேன். வேருெர் நிருபர் குறுக்கிட்டு "சமஸ்கிருதத்தைக் கொண்டால் என்ன?" என்றும் கேட்டார்; "அது பேச்சு வழக்கு அற்றமொழி" என்று பதிலளித்தேன். இவைகளையும் முதலமைச்சர் பக்தவத்சலம் மக்களிடம் எடுத்துக்கூறுவார் என்று நான் எதிர்பார்க்கமுடியுமா!! ஆனல் இதனை நான் கூறியிருப்பதை நானே எப்படி மறந்துவிடமுடியும்!!

இந்துஸ்தான் டைம்ஸ் இதழ் நிருபர், காடிலால், பேட்ரியட் நாளிதழ் நிருபர் கிரிஷ்மதுர், ஸ்டேட்ஸ்மென் நாளிதழ் நிருபர் ரன்ஜித்ராய், டைம்ஸ் ஆப் இந்தியா, சுதர்சன்பாடியா, இந்தியன் எக்ஸ்பிரஸ் (டில்லி வெளியீடு) திரிபாதி, இந்துஸ்தான் ஸ்டாண்டார்டு, சைலேன் சட்டர்ஜி, பி. டி. ஐ. அமைப்பிலிருந்து குப்தாவும் என். பாலசுப்பிரமணியமும், இந்து நிருபர்கள், இ. கே. ராமசாமியும், பட்டாபிராமனும், அமிர்தபஜார் பத்திரிகை நிருபர் தத்தா, ஈவினிங்நியூஸ் சி. பி. இராமச்சந்திரன், மெயில், பி. ராமசாமி, அகில இந்திய ரேடியோ நிலையத்திலிருந்து கே. ஜி. ராமகிருஷ்ணன், யூ. என். ஐ. அமைப்பிலிருந்து கணபதி, இன்பா அமைப்பிலிருந்து ராஜேந்திர கபூர், நவபாரத் இதழிலிருந்து ஜெயின், இந்துஸ்தான் இதழிலிருந்து சந்திராகர், இந்துஸ்தான் டைம்சிலிருந்து தார், தினமலர் ராதாகிருஷ்ணன், பிரிபிரஸ் ஜர்னல் சுவாமிநாதன், நவ்பாரத் டைம்ஸ் ரக்பீர்சகாய், பினுன்ஷியல் எக்ஸ்பிரஸ் சந்தானம், சங்கர்ஸ் வீக்லி, கோபு, திருச்சூர் எக்ஸ்பிரஸ் ஆர். சுந்தரம், ஜன்மபூமி, சுயராஜ்யாவிலிருந்து ஏ. எஸ். ரகுநாதன், இவர்கள் அன்று வந்திருந்தவர்கள். சிலருடைய பெயர் விடுபட்டுப் போயிருக்கக்கூடும். ஒருமணிநேரத்துக்கு மேலாக அவர்கள் கேள்விகள் கேட்க, நான் பதில் அளிக்க, ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பு மிகுந்த விதமாக அந்த மாநாடு நடைபெற்றது.

அத்தனை நிருபர்களை மொத்தமாகச் சந்திப்பது எனக்கு முதல்முறை. அவர்கள் ஒவ்வொருவரும் இது போன்ற நிகழ்ச்சிகள் பலவற்றிலே பலமுறை கலந்து பழக்கப்பட்டிருப்பவர்கள். என்ருலும், அவர்கள் அனைவருமே என்னிடம் மிகவும் நட்புரிமையுடன் நடந்து கொண்டனர்; என் நன்றி அவர்களுக்கு. ஒரு சிலர், என் திறமையைப் பரீட்சிக்கவேண்டும் என்ற முறையில் கேள்விகளைக் கேட்கிருர்களோ என்ற எண்ணம் எழத்தக்கவிதமான பிரச்சினைகளைக் கிளப்பினுர்கள் என்ருலும், மொத்தத்தில் எனக்கு, நமது நிலைமையைத் தெளிவுபடுத்தவும், கொள்கையை வலியுறுத்தவும் அவர்கள் நல்ல முறையில் வாய்ப்பளித்தார்கள். இது எனக்காக அவர்கள் செய்த உதவி என்பதனைவிட, நாம் ஈடுபட்டிருக்கும் தூய காரியத்துக்குத் துணைசெய்திருக்கிருர்கள் என்று கூறுவதுதான் பொருத்தம் என்று எண்ணுகிறேன்.

வந்தமர்ந்த சில விநாடிகளுக்குள்ளாகவே ஒரு நிருபர்—டில்லி இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் என்று நினைவு—"என்ன சொல்லப்போகிறீர்கள்? ஆரம்பிக்கலாமே!" என்ருர்.

"என் கருத்தினை மாநிலங்கள் அவையில் கூறியிருக்கிறேன். மேற்கொண்டு ஏதாகிலும் தேவை என்ருல் கேளுங்கள், கூறுகிறேன்" என்று நான் கூறினேன். கேள்விகள் புறப்பட்டன. ஒருமுறை எதிரே இருப்பவர், அடுத்ததும் வலப்பக்கத்தில் ஒருவர், திடீரென கோடியிலிருந்து மற்ருெருவர், அதைத் தொடர்ந்து இடப்புறத்திலிருந்து ஒருவர், பிறகு மூன்ருவதுவரிசைக்காரர், இப்படிக் கணைகள்! சுவையும் இருந்தது, சூடும் தென்பட்டது. அன்புததும்பிடும் போக்கும் கண்டேன், அருவருப்பை அடக்கிக்கொள்ளும் போக்கும் இருந்தது.

ஜனவரி 26-ம் நாள், தி. மு. கழகம் என்ன திட்டம் மேற்கொண்டது? விளைவு என்ன? விளக்கம் என்ன? என்று ஒரு நிருபர் கேட்டார்.

ஜனவரி 26-ம் நாள், இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழி என்று ஆக்கிவிடுவதைக் கண்டிக்க துக்க நாள் நடத்த, தி. மு. க. திட்டமிட்டது. துவக்கத்திலிருந்தே முதலமைச்சரும் காமராஜர் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களும், வன்முறைச் சூழ்நிலை எழக்கூடிய விதமான முறையில் பேசலாயினர். காங்கிரஸ் இதழ்களில் அந்தப் பேச்சுகள் வந்துள்ளன. கறுப்புக் கொடிகள் அறுக்கப்படும், கொளுத்தப்படும், கறுப்புக் கொடி கட்டுபவன் கரம் வெட்டப்படும் என்பனபோன்ற

பேச்சுகள் பேசப்பட்டன. பல காங்கிரஸ் அமைப்புகள், இத்தகைய வன்முறையில் ஈடுபடப் போவதாக இதழ் களிலேயே அறிவித்தன. போலீஸ் கமிஷனர், பொது இடங்களில் கறுப்புக்கொடி கட்டக்கூடாது, அமளி ஏற்படும்; உங்கள் கட்சி காரியாலயத்தில், வீடுகளில் கட்டிக்கொள்ளுங்கள் என்று எங்களிடமும், கறுப்புக் கொடியைக் கண்டால் அறுக்காதீர்கள், எங்களிடம் கூறுங்கள் நாங்கள் அகற்றிவிடுகிறோம் என்று காங்கி ரஸ் தலைவர்களுக்கும் சொன்னார். நாங்கள் அது போலவே பொது இடங்களில் கருப்புக் கொடி கட்ட வில்லை; எங்கள் வீடுகளில்தான் கட்டினோம்; ஆனால் காங்கிரஸ் படையினரும், போலீசாரும் எங்கள் கட்ட டங்களிலே அத்து மீறி நுழைந்து கொடிகளை அறுத் தனர்; சிலர் கொளுத்தினர். இந்தவிதமான வன்முறைச் செயல் எழக் காரணமாக இருந்தவர்கள் காங்கிரஸ் தலைவர்களே—என்று கூறினேன்.

விவரமாக. நான் இந்தச் சம்பவங்களை விளக்கி யது கேட்டு, பல வட இந்திய இதழ் நிருபர்கள், முதல் முறையாக இந்த விவரம் கிடைக்கிறது; இதுவரை தெரியாதிருந்தது என்று கூறி வியப்படைந்தனர்.

இன்னும் தெரிய வேண்டியது நிரம்ப இருக்கிறது; நள்ளிரவில் மாணவர் விடுதிகள் தாக்கப்பட்டதும், அங் குக் கண்ணீர்ப்புகைக் குண்டு வீசப்பட்டதும், அமைதி யாக இருந்த மாணவர்களின் கிளர்ச்சி அமளியாகிட வழி வகுத்த அடாத நடவடிக்கைகளும், இவ்விதம் பல உள்ளன. இவைகளெல்லாம் அனைவருக்கும் தெரிய வேண்டும், உண்மை அப்போதுதான் துலங்கும், எங்கள் கழகத்துக்கும் இந்த நடவடிக்கைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது மெய்ப்பிக்கப்படும். கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், விடுதித்தலைவர் கள், இதழாசிரியர்கள், வழக்கறிஞர்கள் போன்றோர்கள் சான்றளிக்கத் தயாராக உள்ளனர். ஆகவேதான் நீதி விசாரணை வேண்டுமென வற்புறுத்துகிறோம் என்று விளக்கமளித்தேன்.

அடுத்தபடியாக ஒரு நிருபர், "முதலமைச்சர்கள் மாநாடுபற்றி என்னகருதுகிறீர்கள்?" என்று கேட்டார்.

முதலமைச்சர்கள் மாநாட்டிலும், காங்கிரஸ் காரி யக் கமிட்டியிலும், பிரச்சினைபற்றிப் பேசி, சில சிபா ரிசுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில், அங்கு காட்டப்பட்ட கருத்தோட்டத்தை ஒட்டி, எந்த விதமான மசோதா என்ன வார்த்தைகள் கொண்டதாக தயாரிக்கப்படுகிறது என்பதனைப் பார்த்த பிறகுதான் எங்கள் கருத்தைக் கூறமுடியும். பொறுத்திருந்து பார்க்கவேண்டும். மற்றொன்று; முதலமைச்சர்கள் காட்டிய மனோபாவத்திற்கு ஏற்றவிதமாகவே மசோதா கொண்டு வரப்படுகிறது என்றாலும், அது ஒரு தற்கா லிகமான பரிகாரமாகத்தான் கொள்ளப்படும்; கோரிக் கையும் குறிக்கோளும் நிறைவேறி விட்டதாக மக்கள் கருதமாட்டார்கள்...நாங்கள் (தி. மு. க.) விரும்புகிற பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற இலட்சியப் பாதையில், அது ஒரு படி என்று மட்டுமே நாங்கள் கருதுவோம் என்று கூறினேன்.

ஆட்சிமொழிகள் சட்டத்தில் எந்தவிதமான திருத் தம் வரும் என்பது, இங்கு இத்தனை நாள் இருந்த பிற கும், என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதுபற்றி சர்க்கார் எந்த அளவு சிந்தனை செய்திருக்கிறார்கள் என்றுகூட அறிந்துகொள்ள முடியவில்லை. போன காரியம் முடிந்தது; நூற்றுக்கு நூறு வெற்றி என்று எங்கள் முதலமைச்சர் டில்லியிலிருந்து திரும்பியதும் கூறியிருக்கிறாரே என்று நான் கூறும்போது இங்குள்ள சிலர் கண் சிமிட்டுகிறார்கள், கேலியாக!!

"ஆட்சிமொழிகள் சட்டத்தில் திருத்தம் உடனடி யாகக் கொண்டுவரச் சொல்லி, வற்புறுத்தப் போகிறீர் களா?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

பாராளுமன்றப் பேச்சில் லால்பகதூர், இதிலே அவசரம் காட்டக்கூடாது; அவரவர்களும் தத்தமது கருத்துக்களை கூறியபடி இருக்கக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆயினும் எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்துப் பேசப்போவ தாகவும் தெரிவித்திருக்கிறார். அவ்விதம் அழைக்கப் பட்டால், நான் வலியுறுத்திப் பேசுவேன் என்று கூறினேன்.

இடையில் இதனையும் கூறிவிடுகிறேன். இங்கு, பல கட்சித் தலைவர்களையும் கலந்து பேசும் முயற்சி இருக்கும் அறிகுறியே காணோம்—பத்திரிகையில் வந்த செய்தியைத் தவிர!!

"சௌரி சௌரா கலகம்பற்றிக் கூறினீர்கள். அந்தக் கலகம் நடந்தது கண்டதும் மகாத்மா, கிளர்ச் சியை வாபஸ் பெற்றுவிட்டாரே, நீங்கள் ஏன் அது போலச் செய்யவில்லை?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

கிளர்ச்சி என் தலைமையில் நடைபெறவுமில்லை, கழகக் கிளர்ச்சியுமல்ல அது, நான் வாபஸ் பெற. எங்கள் கிளர்ச்சி, 26-ம் நாள் மட்டும், துக்க நாள்

காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ.	10—00
ஆறுமாத சந்தா	ரூ.	5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

நடத்துவது. 25-ம் நாள் நள்ளிரவே நாங்கள் கைது செய்யப்பட்டு, பிப்ரவரி 2-ம் நாள்தான் விடுதலை செய்யப்பட்டோம்.

நாங்கள் உள்ளே இருந்தபோதும் பிறகும் தொடர்ந்து நடைபெற்ற மாணவர் கிளர்ச்சி, கழகம் நடத்தியது அல்ல. ஆகவே அதனை நிறுத்திவிட எனக்கு எப்படி வாய்ப்பு இருக்கமுடியும்? நாங்கள் திட்டமிட்டு, எங்கள் கழகத்தின் சார்பில் கிளர்ச்சி நடத்தினுல், இன்னின்னர் மட்டும் இன்னின்ன முறையில் கிளர்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்று திட்டமிட்டு, வரையறை வைத்திருப்போம். தீயசக்திகள் நுழையக் கண்டால் தடுத்து அப்புறப்படுத்தி இருப்போம் என்று கூறினேன்.

ஒரு நிருபர் கேட்டார், "இந்தி ஆதரவாளர்களாக உள்ள சில தலைவர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பிக்கும் பள்ளிகளுக்கு அனுப்புகிருர்களா? உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

லால்பகதூர் அவர்களின் பேரப்பிள்ளை, டில்லியில் அவ்விதமான பள்ளிக்கூடத்தில் படிப்பதாகக் கேள்விப் பட்டேன் என்று கூறினேன்.

உண்மையில், இங்கு நான் இதுபோலக் கேள்விப் பட்டேன்.

நான் கூறினதை எந்த நிருபரும் அன்றும் மறுக்கவில்லை: இன்றும் மறுக்கவில்லை.

தெரியுமா! தேரியுமா! உங்கள் அண்ணுதுரை என்ன சொன்ஞன் தெரியுமா! என்று சிலம்புபோடும் சீலர்கள், இந்தி ஆதரவாளர் லால்பகதூர் தமது பேரப் பிள்ளையை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி இருக்கிருர், என்பதனைக் கூறவா செய்வார்கள்? எப்படி எதிர்பார்க்க முடியும்? சிலர் பசுவிடமிருந்து பால் பெறுகிருர்கள்; சிலர் 'கோமயம்' மட்டும் சிரமப்பட்டு, செம்புப் பாத்திரத்தில் பிடித்து வைத்துக்கொள்கிருர்கள். அது அவரவர்களின் விருப்பம், தேவையைப் பொருத்தது!

"திராவிட முன்னேற்றக் கழகம் ஏதாவது கிளர்ச்சி செய்யப்போகிறதா?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

பொதுக்குழு கூடித்தான் இதுபற்றித் தீர்மானிக்கும். என்ருலும் இப்போது சூழ்நிலை கெட்டுக்கிடக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கிளர்ச்சி துவக்கினுல் தீயசக்திகள் நுழைந்துவிடும் என்ற அச்சம் எனக்கு இருக்கிறது என்றேன்.

"அப்படியானுல் மக்களிடம் உங்களுக்கு இருந்த செல்வாக்கும் பிடியும் குறைந்துவிட்டது என்று பொருளா?" என்று ஒரு நிருபர் மடக்கினர்.

மக்களிடம் செல்வாக்கு இருந்ததாகவாவது ஒப்புக் கொள்கிறீரே, மெத்த மகிழ்ச்சி. அந்தச் செல்வாக்கு அப்படியேதான் இருக்கிறது. ஆனுல் நாம் பேசிக் கொண்டது மக்களைப்பற்றி அல்ல; தீயசக்திகளைப் பற்றி!!—என்று நான் கூறினேன். அவர் விடவில்லை. "ஆக தீயசக்திகளை அடக்கிட முடியாது என்று அஞ்சுகிறீர்கள்?" என்று குறுக்குக் கேள்வி கேட்டார். ஆமய்யா ஆம்! சர்க்காரால் முடியாததுபோலவே, தீயசக்திகளை அடக்கிட என்னுலும் முடியாமற் போய் விடும் என்று அஞ்சுகிறேன் என்று பதிலளித்தேன்.

"மொழி விஷயமாக உமது கொள்கை என்ன?" என்ற பொதுப் பிரச்சினையை ஒருவர் எழுப்பினுர்.

தேசீய மொழிகளெல்லாம் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அந்தக் கட்டம் வரையில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும். இதற்கு நாமாக ஒரு காலக்கெடு வைத்துக்கொள்ளக்கூடாது.

"பிறகு, ஒரு தொடர்பு மொழி வேண்டுமே. அது எது?"

அது எது என்பது மக்களாகப் பார்த்து, காலப் போக்கில், இயற்கையான சூழ்நிலையில், தீர்மானித்துக் கொள்ளவேண்டும். சர்க்கார் இன்ன மொழிதான் தொடர்பு மொழி என்று ஆணையிடக்கூடாது; ஆதரவு தரக்கூடாது; மக்களே தீர்மானிக்க வேண்டும்.

பதினுன்கு மொழிகளில், எது தொடர்பு மொழியாகும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? என்று கேட்டார் நிருபர்.

பதினுன்கு மொழிகளில் ஏதாவது ஒன்று. தமிழுக்கு என்ன! வளமான மொழி! தொன்மையான மொழி! இலக்கியச் செறிவுள்ளது! தொடர்பு மொழியாகத் தமிழ் இருக்கலாமே என்று நான் கூறினேன்.

"தொடர்பு மொழியாக சமஸ்கிருதம் இருக்கலாமல்லவா?" என்று கேட்டார் மற்ருெருவர். 'சமஸ்கிருதமா அது பேச்சு வழக்கு அற்ற மொழியாயிற்றே! என்றேன். மேலால் அவர் அந்தப் பிரச்சினையைத் தொடரவில்லை.

இந்தி ஆட்சிமொழி என்ற திட்டத்தைச் சர்க்கார் விட்டுவிட்டால். பிறகு இந்தி பரப்பப்படுவதுபற்றி உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே? என்று ஒருவர் கேட்டார்.

இல்லை! ஆனுல் அந்த பரப்பும் காரியத்தைச் சர்க்கார் செய்யக்கூடாது. மக்களின் அமைப்பு (அதிகார பூர்வமல்லாத) செய்யவேண்டும் என்று கூறினேன்.

அப்போதுதான் அந்த நிருபர், கேட்டார், "நீங்கள் உதவி செய்வீர்களா?" என்று. நான் உடனே கூறினேன், "நான் அந்த அறைகூவலை ஏற்றுக்கொள்கிறேன். இந்தி ஆட்சிமொழி அல்ல என்று சர்க்கார் அறிவிக்கட்டும்; இந்தியைப் பரப்பும் காரியத்தில் சர்க்கார் ஈடுபடாமல் இருக்கட்டும்" என்று கூறினேன்.

இதுதான் முதலமைச்சர் கரத்துக்குப் பந்து ஆயிற்று! என்ன வேடிக்கையான இயல்பு!!

இந்தியை ஆட்சிமொழி ஆக்கும் திட்டத்தைச் சர்க்கார் விட்டுவிடவேண்டும் என்றேனே அது?

இந்தியைப் பரப்பும் வேலையில் சர்க்கார் ஈடுபடக் கூடாது என்றேனே, அது?

பதினுன்கு மொழிகளும் ஆட்சிமொழிகளாக வேண்டும் என்றேனே, அது?

தொடர்பு மொழி என்று எதனையும் சர்க்கார் அறிவிக்கக்கூடாது என்றேனே, அது?

தொடர்பு மொழியாக, தொன்மையும் வளமையும் மிக்க தமிழ் ஏன் கொள்ளப்படக்கூடாது என்று கேட்டேனே, அது?

அவை ஒன்றுகூட முதலமைச்சருக்கு, முக்கியமானவையாகப் படவில்லை!! ஏன் என்று கேட்க நான் யார்!! அவரோ முதலமைச்சர்!! நானே கருணுநிதிக்கு அண்ணன்? நான்போய் கேட்கலாமா அவ்வளவு பெரியவரை, இந்தச் சங்கடமான கேள்வியை!!

ஒரு நிருபர் கேட்டார், "ஆங்கிலத்தை வெள்ளைக்காரன் புகுத்தியபோது ஏற்றுக்கொண்டீர்களே, இந்தியை அதுபோல ஏற்றுக்கொண்டால் என்ன?" என்று.

உம்முடைய கேள்வியின் தோரணையே அச்சமூட்டுகிறதே ஐயா! வெள்ளைக்காரன் எப்படி ஆங்கிலத்தைக் கற்கச்சொன்னுனே அதுபோல இந்தியை ஏற்கச் சொல்கிருேம் என்ருல் என்ன பொருள்? வெள்ளைக்காரன்போல இந்திக்காரர் ஆட்சி செய்யத் திட்டமிடுகிருர்கள் என்பதல்லவா? இதைத்தான் இந்தி ஏகாதிபத்தியம் என்பது. மற்ருென்று ஆங்கிலத்தை வெள்ளைக்காரன் திணிக்கவில்லை. நான் அறிந்த அளவில் ராஜாராம் மோகன்ராய் போன்ற சான்ருேர்கள் ஆங்கிலக்கல்வி வேண்டும் என்று முறையிட்டு பிறகே ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது, என்றேன்.

"பன்மொழிகள் ஆட்சி மொழிகளாவது நடைமுறைக்கு ஒத்துவராது என்கிறேன்" என்ருர் ஒருவர்.

கடினம்—சங்கடம் என்றெல்லாம் சொல்லுங்கள்; நடைமுறைக்கு ஒத்துவராது என்று கூறிவிடமுடியாது. பலமொழிகள் உள்ள இடத்தில், வேறுமார்க்கம் இல்லையே! என்று கூறினேன்.

மறுபடியும் ஒருவர் அடிப்படைக் கேள்வியைத் துவக்கினுர். "என்ன காரணத்துக்காக இந்தியை வேண்டாமென்கிறீர்கள்" என்ருர்.

பலமுறை பல காரணங்களைக் கூறியாகிவிட்டது. ஒன்றுமட்டும் மறுபடியும் வற்புறுத்துகிறேன். இந்தி சிலருக்கு, தாய்மொழி — தன்னுலே வருவது—பரம்பரைச் சொத்து—அந்த மொழியை நாங்கள் கற்றுத் தேறி இந்திக்காரருடன் போட்டியில் வென்று இடம் பிடிப்பது, நிரந்தரமான இடையூறு — இது அநீதி என்றேன்.

"இயற்கையான சக்திகளால் மொழிகள் வளர வேண்டும், பிறகு அவைகளிலிருந்து தொடர்புமொழி கிடைக்கவேண்டும் என்கின்றீர்? இயற்கையான சக்தியை என்ன செய்து பெறுவது?" என்று கேட்டார்.

சக்தி இன்னவிதம் பெறக்கூடியது என்று திட்டமிட்டுக் கூறமுடியாது. பொதுவான சில யோசனைகள் கூறுகிறேன். சகிப்புத்தன்மை வேண்டும், மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிக்கும் இயல்பு வளரவேண்டும், ஆதிக்கநோக்கம் அகலவேண்டும், வெறித்தனம் என்கிருர்களே அது ஒழியவேண்டும். ஒரு உதாரணம் தருகிறேன். நான் நண்பர்களுடன் மோட்டாரில் வட இந்தியப் பகுதிகள் சென்றிருக்கிறேன்—மத்தியப் பிரதேசம் போன்ற இடங்கள். அங்கு வடஇந்தியர்கள், ஆங்கிலம் தெரிந்தவர்கள், எங்களுக்கு இந்திதெரியாது என்று தெரிந்த பிறகும், வேண்டுமென்றே பிடிவாதமாக, நாங்கள் கேட்பவைகளுக்கு, இந்தியில்தான் பதில் அளித்தார்கள். இது என்ன மனுேபாவம், என்றேன். அவர் புரிந்துகொண்டார் என்று எண்ணுகிறேன்.

டில்லி இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர், வரும்போதே, சொன்னுர் "நான் இந்திவாலா" என்று; நான் கேட்காமலிருக்கும்போதே. அவர்தான், சில கேள்விகளை வேண்டுமென்றே, என் பொறுமையைக் கண்டறியும் முறையில் கேட்டார்.

அவர் கேட்ட கேள்வி இது.

"எவ்வளவுதான் நீங்கள் மறுத்தாலும், பொது மக்கள், தி. மு. கழகமும் வேறுசில அரசியல் கட்சிகளுந்தான் வன்முறைச் செயலுக்குக் காரணம் என்று எண்ணுகிருர்கள். அந்த நிலையில், தமிழ்நாடு, இந்தியாவின் மற்றப் பகுதியை மிரட்டிப் பணியவைக்க முயலுகிறது, இது முறையா?" என்று கேட்டார்.

ஐயா! உம்முடைய கேள்வியின் அடிப்படையே தவறு. தி. மு. கழகம் வன்முறையைச் செய்யவில்லை. தூண்டவில்லை, பங்கு இல்லை, என்று நான் பன்னிப் பன்னி மறுத்த பிறகும், நீர், அந்தத் தவருன எண்ணத்தை விட்டுவிடாமல், அதை அடிப்படையாக்கிக் கொண்டு, வாதங்களை அடுக்கும்போதே, உமக்கு நான் பதில் கூறமுடியாது என்று கூறும் உரிமை எனக்கு இருக்கிறது. என்ருலும் கேட்டதற்குச் சொல்கிறேன்; தமிழ்நாடு, இந்தியாவின் மற்றப் பகுதியை மிரட்டிப் பணியவைக்கக் கிளம்பவில்லை. சொல்லப்போனுல், இந்தியாவிலேயே, பலம்குறைந்த பகுதியாகத் தமிழ்நாடு இருக்கிறது, என்று கூறினேன். கூறிவிட்டு, ஐயா! வன்முறைக்குக் காரணம் தி. மு. கழகம் என்று முதலமைச்சர் கூறியதை வைத்துக்கொண்டு பேசுகிறீரே, அதே முதலமைச்சர் சில நாட்களுக்குப் பிறகு, கள்ளச் சாராயம் காய்ச்சுவோரும், கள்ளக்கடத்தல் பேர்வழிகளும் போலீசாரிடம் தங்களுக்கு இருந்துவந்த வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்று அறிக்கை விடுத்திருப்பது தெரியுமா என்று கேட்டேன். அப்படி ஒரு அறிக்கை வெளிவந்ததாகவே அந்த நிருபர் காட்டிக்கொள்ளவில்லை. கெட்டிக்காரர்!

"பாராளுமன்றக் கூட்டம் ஒரு தொடராவது தெற்கே நடத்தப்படவேண்டும் என்று ஒரு யோசனை கூறப்படுகிறதே, அதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

ஆமாம், மேலும் பல யோசனைகள்கூடக் கூறப்படுகின்றன. பிரதமமந்திரி வடக்கே இருந்தால், குடிஅரசுத் தலைவர் தெற்கே வசிக்கவேண்டும், கடற்படைத் தலைமைக் காரியாலயம் வடக்கே இருந்து தெற்கே மாற்றப்பட்டு, கொச்சியில் அமைக்கப்படவேண்டும், இத்தகைய அமைப்புகள் இந்தியாவில் பல்வேறு இடங்களிலே பரவலாக்கப்படவேண்டும் என்றெல்லாம் யோசனைகள் கூறப்படுகின்றன. இவைகள், தென்னக மக்களின் மனதுக்கு ஒருவிதமான ஆறுதல் அளிக்கலாம்—என்று கூறினேன்.

"மும்மொழித் திட்டப்படி இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டால், உமது போக்கு எப்படி இருக்கும்?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

நான் என் எதிர்ப்பைத் தெரிவிப்பேன். இப்போதே அங்கு இந்தி கற்றுத் தரப்படுகிறது. இந்தி தவிர வேறு எந்த இந்திய மொழி கற்பதற்கும் வகை செய்யப்படாததால் மறைமுகமாக இந்தி கட்டாயப்படுத்தப்பட்டு வருகிறது. வடக்கே உள்ளவர்களோ, தென்னக மொழியைக் கற்க முன்வரவில்லை. மூன்ருவது மொழியாக சமஸ்கிருதம் படிக்கிருர்கள். இந்தியைக் கட்டாய பாடமாக்கினுல் எங்கள் மக்கள் வேதனைப்படுவார்கள்; எதிர்ப்பார்கள், என்று தெரிவித்தேன்.

"மத்திய சர்க்கார் அலுவல்களுக்கான பரீட்சை சம்பந்தமாக என்ன கருதுகிறீர்" என்று கேட்டார் ஒரு நிருபர்; அதுபற்றித் தெளிவான எந்தத்திட்டமும் வெளியிடப்படவில்லை, ஆகவே அதுபற்றி நான் கருத்தைச் செலுத்தவில்லை என்று பதிலளித்தேன்.

"தொடர்பு மொழி இயற்கையான சூழ்நிலையில் வரவேண்டும் என்கிறீரே, மக்கள் ஒரு சிறுபான்மை மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுவிடக் கூடுமல்லவா?" என்று ஒருவர் கேட்டார்,

அப்படியும் நடக்கலாம். மற்றும் ஒன்று. வளமானதாக இருக்கிறதா என்று பார்த்து அத்தகைய மொழியை மக்கள் தொடர்பு மொழியாகக் கொள்ளக் கூடும். அதற்காகத்தான் நான் தமிழுக்காக வாதாடுகிறேன். தமிழ் அத்தனை வளமான மொழி!—என்று கூறினேன்.

"ஒருவர், வங்காள மொழியும்தான் என்ருர்," சரி! தமிழ் போன்றே வங்காள மொழியும்; இருக்கட்டும் என்றேன். அவருடைய வங்காள மொழி ஆர்வம், பாராட்டத்தக்கது என உணர்ந்தேன்.

"சௌரி சௌரா பற்றிச் சொன்னீர்கள்—அங்கு வன்முறை நடந்தது, கிளர்ச்சியை மகாத்மா வாபஸ் பெற்றுக்கொண்டார். ஆனுலும் அதற்காக, காங்கிரஸ், கிளர்ச்சி செய்யும் உரிமையை இழந்துவிடவில்லை அல்லவா?" என்று கேட்டார்.

உண்மை. நாங்கள்கூட கிளர்ச்சி செய்யும் உரிமையை இழந்துவிடச் சம்மதிக்கவில்லை, வன்முறையைக் கண்டிக்கிருேம். வன்முறை எழமுடியாத முறையில் கிளர்ச்சிகள் அமையவேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாக இருக்கிருேம். ஆனுல் கிளர்ச்சி நடத்தும் உரிமையை விட்டுவிடவில்லை, என்று கூறினேன்.

"இந்தி ஒழிக! என்று முழக்கமிடுகிறீர்களே, இந்தி ஆதிக்கம் ஒழிக என்பதுதானே முழக்கமாக இருக்க வேண்டும்?" என்று ஒருவர் கேட்டார்.

இலட்சிய முழக்கங்கள் எடுப்பாக, சுருக்கமாக அமையவேண்டும். சர்க்காரின் இந்தி ஆட்சி மொழி

விற்பனையாளர்களுக்கு

மணியாடர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

உரிமையாளர்
"காஞ்சி"
சின்ன காஞ்சிபுரம்.

ஆக்கும் திணிப்பு ஒழிக!-என்று நீட்டி முழக்கிக்கொண்டிருக்க முடியாது அதன் காரணமாகத்தான் இந்தி ஒழிக என்று சுருக்கமான முழக்கம் இருக்கிறது. மகாத்மாகாந்தி வெள்ளையனே வெளியேறு! என்ற இலட்சிய முழக்கம் தந்தார். அவர் விரும்பியது வெள்ளைக்காரர்கள் வெளியேற வேண்டும் என்பது அல்ல; வெள்ளையர் நடத்தும் ஆட்சி ஒழியவேண்டும் என்பது. வெள்ளையர் இந்தியாவை ஆட்சி செய்வது வெளியேற வேண்டும் என்று விரித்துக் கூறவில்லை, சுருக்கமாக வெள்ளையனே வெளியேறு! என்றார். செய் அல்லது செத்துமடி என்பது அவர்தந்த மற்றொரு சுலோகம். என்ன செய்ய வேண்டும், எப்போது, எப்படி, ஏன் சாகவேண்டும் என்றெல்லாம் விளக்கமாக்கி, விரிவாகக் கூறவில்லை. சுருக்கமாக, செய் அல்லது செத்துமடி என்றார். இலட்சிய முழக்கங்கள் அவ்விதந்தான் சுருக்கமாக அமையும், என்று கூறினேன்.

"இந்தி எதிர்ப்பு உணர்ச்சி காரணமாக கழகத்துக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே உள்ள வேற்றுமை ஓரளவு குறைந்துவிட்டது உண்மையா?'' என்று ஒருவர் கேட்டார்.

உண்மைதான். பல காங்கிரஸ்காரர்கள் நாங்கள் கூறும் கருத்துக்களைப் பேசுகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை சட்டசபையில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அரசியல் கட்சிகள் அமைத்துக்கொண்டுள்ள அரண்களை உடைத்துக்கொண்டு இந்தி எதிர்ப்புணர்ச்சி பீறிட்டுக் கிளம்பிவிட்டது என்று கூறினேன்.

வேறொரு நிருபர், "பல ஆட்சிமொழித் திட்டமும் கூறுகிறீர், தொடர்புமொழித் திட்டம்பற்றியும் கூறுகிறீர்; இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண் அல்லவா?'' என்று கேட்டார்.

எப்படி முரண்? முரண் அல்லவே! பல மொழிகள் இருப்பதனால்தான் ஒரு தொடர்பு மொழிப் பிரச்சினை எழுகிறது. இரண்டு திட்டமும் ஒன்றுக்கொன்று முரண் அல்ல; துணை என்று கூறினேன்.

இந்தவிதமாக ஒரு மணி நேரம் நடந்தது அந்த மாநாடு. பயனுள்ளதாகவே எனக்குத் தோன்றுகிறது.

சில நிருபர்கள் கேள்விகள் கேட்டது, அந்தப் பிரச்சினை புரியாததால் அல்ல, நான் என்ன சொல்லுகிறேன் பார்க்கலாம் என்ற நோக்கத்துடன். முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களுக்கும் தெரியாதா, நான் பேசியிருப்பதன் பொருளும் பொருத்தமும், தெரியும். தெரிந்தும் வேறுவிதமாகப் பேசுவானேன்? காரணம், யாருக்குத் தெரியாது. எதையாவது பிடித்துக்கொண்டு கரையேற எண்ணுவது தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பவருக்கு எழும் எண்ணம்; துடிப்பு. நெடுநாட்களாக, கழகத்தை அழித்திட, என்ன கிடைக்கும், என்ன கிடைக்கும் என்று காங்கிரஸ் தலைவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள், எதை எதையோ பேசுகிறார்கள் பிறகு எல்லாம் வீண் என்பதுகண்டு விம்முகிறார்கள். இது அவர்களின் இயல்பு. இதனைக்கண்டு நான் வியப்படையவில்லை. இதுவும் ஒரு நன்மைக்குத்தான் என்ற முறையில் எடுத்துக்கொண்டு, இங்கு நான் கலந்துகொண்ட நிகழ்ச்சி குறித்து தெரிவித்திருக்கிறேன். மணி மூன்று, தூங்க முயலுகிறேன். நன்றி, வணக்கம்.

அண்ணன்,



அறிவிப்பு

நான் தில்லியிலிருந்து அனுப்பிய கடிதம் 12-3-65 அன்றுதான் காஞ்சிபுரம் வந்து சேர்ந்தது. அக்கடிதம் வந்து சேருவதற்குமுன் சென்ற கிழமை இதழ் அச்சாகிவிட்டமையால், அதனை இந்தக் கிழமை இதழில் காணுகின்றீர்கள்.

அன்பன்,

அண்ணாதுரை.

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஞாபகசக்தியை வளர்க்க இன்னொரு மார்க்கமும் இருக்கிறது என்று சமீப காலத்துச் சோதனைகள் தெரிவிக்கின்றன. ஒன்றை மனப்பாடம் பண்ணுவதற்கு மிக்க உத்தமமான காலம் படுக்கச் செல்வதற்குச் சற்று முன்புள்ள நேரம்தான். இந்த உசித நேரத்தில் மனப்பாடம் செய்பவர்கள் மற்ற நேரத்தில் மனப்பாடம் செய்பவர்களைக் காட்டிலும் 20, 30 சதவிகிதம் அதிக வெற்றி காணுகிறார்கள். இம்முறையில், மனப்பாடம் பண்ணவேண்டிய பகுதி மனதில் அப்படியே வந்து உள்ளே இறங்கிவிடுவது மாதிரி தோன்றுகிறது. இந்த வசதி கிட்டுவதில்லை. படிப்பதற்கும் படுப்பதற்கும் இடையில் இரண்டு மணிநேர அவகாசம் இருந்தால்கூட.

ஞாபகசக்தி என்பது ஏதோ சில அதிர்ஷ்டசாலிகளின் தனித்ததோர் உடைமை, அவர்களுக்கு இயற்கை அன்புகூர்ந்து அளித்துள்ள வசதி என்பது கிடையாது என்கிற முக்கியமான உண்மையை அண்மைக் காலத்து ஆராய்ச்சிகள் நமக்குத் தெள்ளத் தெளியத் தெரிவிக்கின்றன. எவருக்கும் தம்முடைய ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்ளும் உரிமை உண்டு. அதற்கான மார்க்கமும் தாராளமாய் இருக்கிறது. முறையை உணர்ந்து, பொறுமையுடனும் விடாமுயற்சியோடு நெஞ்சத் திட்டத்தோடும் பயின்றால், நல்ல ஞாபகசக்தி எவருக்கும் ஏற்படலாம்.

—'நல்வழி

விற்பனையாளர்களுக்கு

1—4—65 முதல் கணக்கைப் புதுப்பிக்க இருப்பதால், 31—3—65 வரையுள்ள **பாக்கி முழுவதையும்** இம்மாதப் பட்டியல் கண்டவுடன் ஏப்ரல் மாதம் 1-4-65க்குள் அனுப்பி வைக்கும்படி விற்பனையாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

— உரிமையாளர்.

குறிப்பு:-விற்பனையாளர்கள் தங்களுக்குத் தேவைப்படும் பிரதிகளின் எண்ணிக்கை விபரத்தை, ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைக்குள்ளாக தெரிவிக்க வேண்டுகிறோம்.

“அறியாமை”

— பழநி —

‘அறியாமை’யை அறிவீர்களா? அறிவுடைமை இருக்கிறது அல்லவா; அதற்கு மூத்தது அறியாமை. ஆமாம். முதலில் நம்மிடம் இருப்பது அறியாமை. பிறகு அறிகிறோம், ஆகவே அறியாமை அறிவுக்கு மூத்ததுதானே! எனக்கென்னமோ அறிவைவிட அறியாமையே மேல் என்று தோன்றுகின்றது. எனக்கு மட்டும்தான்என்று நினைக்க வேண்டாம். “கல்லாத பேர்களே நல்லவர்கள்” என்று பாட்டுகூட இருக்கிறதே; அதைப் பாடியவரும் என்னைப் போலவே அறியாமையின் அழகில் சொக்கிப் போனவராக இருக்கவேண்டும் என்று நினைக்கின்றேன்.

திருவள்ளுவர் பெருமையாகச் சொல்கிறார் ‘அறிவு அற்றம் காக்கும் கருவி’ என்று. அதாவது அறிவானது ஆபத்தை, துன்பத்தைத் தடுக்கும் என்கிறார். அது சரி. நான் கேட்கின்றேன், அறிவைப் பெறுவது என்றால் என்ன அவ்வளவு சுலபமா? எவ்வளவு படிக்கவேண்டியிருக்கிறது, எவ்வளவு தேர்வு எழுத வேண்டியிருக்கிறது. எத்தனை துன்பம். அப்பப்ப! படிப்பது எவ்வளவு துன்பம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? தேர்வுக்கு முன்னாள் இரவு ஒரு மாணவன் படிக்கும்போது போய்ப்பாருங்கள். என்னென்ன ஏற்பாடுகள், எத்தனைவிதமான தயாரிப்புகள்! மேசைமீது அடுக்கடுக்காக, வீழ்ந்தும், கவிழ்ந்தும், கலைந்தும் கிடக்கும் நூல்கள் என்ன, விதவிதமான அமைப்புகளில் காணக் கிடக்கும் ‘வழிகாட்டி’கள் என்ன, ஒரு மூலையிலே உள்ள குறிப்புகள் என்ன, மேசைக்கு அடியில் தேனீரைத் தாங்கி நிற்கும் குப்பி என்ன, தண்ணீர்ச் செம்பு என்ன, இத்தனை ‘கருவி’களுடன் வந்து உட்கார்ந்தால் தூக்கம் என்னமாய் வரும் தெரியுமா? இப்போது நினைத்தால் கூட நான் அப்போது தூங்கிய தூக்கம் வந்து கண்ணை மூடுகிறது! இதெல்லாம் தெரிந்துதான் போலும் சில பேர் “மழைக்குக்கூட பள்ளிக்கூடத்தில் ஒதுங்காமல்” சாமர்த்தியமாகத் தப்பிவிட்டார்கள். அவர்கள் பாக்கியவான்கள்! அவர்களைப் போல் இல்லாமல் பள்ளிக்கூடம் போய், படித்துத் தொலைத்தோம். அமெரிக்கா எப்போது, யாரால், எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது? இங்கிலாந்தின் விளை பொருள்கள் யாவை? ஆப்ரிக்காவுக்கு இருட்டுக் கண்டம் என்று ஏன் பெயர்வந்தது? ஆஸ்திரேலியாவில் கங்காரு தவிர வேறு என்னென்ன விலங்குகள் உள்ளன? ஜகாங்கீரின் ஆட்சிச்

“ த ”

சிறப்புக்கள் யாவை? உலகத்தில் நீளமான ஆறு எது? உயரமான மலை எது? என்று என்னென்னவோ படித்தோம். என்ன பயன் என்கிறீர்கள்? இதுவரை யாராது நம்மைப் பார்த்து இதையெல்லாம் கேட்டது உண்டா? இல்லை, நாம் சொன்னால் தான் கேட்டுக் கொள்வார்களா?

“நயகார நீர்வீழ்ச்சி என்பது சுமார்—” என்று நீங்கள் யாரிடமாவது சொல்லத் தொடங்குங்கள், “அட சரிதான் போய்யா, பெரிய நீர்வீழ்ச்சியைக் கண்டு விட்டே. விலையிலே வீழ்ச்சி உண்டா, உனக்குத் தெரியுமா அதைச் சொல்” என்று சொல்லிவிட்டுப்போவார்கள். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பற்றியெல்லாம் அவருக்கு அக்கறை இல்லை. ‘அஸ்கா’ எங்கே கிடைக்கும், அதற்கு யாரைப் பிடிக்க வேண்டும் எவ்வளவு தரவேண்டும் என்பது போன்ற ‘ஜீவாதாரமான’ சங்கதிகளே அவருக்குத் தேவை.

அறிந்ததினால், சில நேரங்களில் மனத்தில் சங்கடங்கள்கூட உண்டாகின்றன. ‘வடவேங்கடம் தென்குமரி ஆயிடை’ உள்ள பகுதி தமிழ்நாடு என்று அறிந்தோம். தமிழன் இமயம் சென்றான், வென்றான்; கடாரம் வென்றான், என்றெல்லாம் படித்துவிட்டு, இன்று நாடற்றவனாகி, நாதியற்றவனாகித் தாய் நாடு நோக்கி வருகின்றானே என்பதையும் படிக்கும்போது, ஒரு நேரம் இல்லாவிட்டால் ஒரு நேரத்தில், “ஐயோ பாவம்!” என்று சொல்லத் தோன்றுகின்றது. இதையெல்லாம் அறியவில்லை — என்று வைத்துக் கொள்ளுங்கள், என்ன சங்கடம் இருக்கிறது? இலங்கையிலிருந்து தமிழர் துரத்தப்படுகின்றனர் என்ற செய்தியைப் படித்தால் “ஓகோ அப்படியா, சரிதான். வரட்டும் பார்க்கலாம்” என்று சொல்லிவிட்டுக் கொட்டாவிவிடலாம் அல்லவா? எவ்வளவு சுகம் இது! இதை விட்டுவிட்டு, என்னத்தையாவது அறிந்து கொள்வது, அப்புறம் அவதிப்படுவது ஏன் என்று கேட்கின்றேன்.

அறிவை ஒளி என்றும், அறியாமையை இருள் என்றும் இந்தப் ‘பாழும்’ புலவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வதால் அறியாமையை மிகவும் தாழ்வாகச் சொல்லிவிட்டதாக அவர்கள் நினைப்பு. என்னே அவர்களது அறியாமை! ஒளிஎன்றால்என்ன உயர்வு? நான் கேட்கிறேன். எத்தனை நேரம் ஒளியிலேஇருப்பது?கண்கூசாதோ? சற்று நேரம் ஒளியிலே இருந்துவிட்டுப் பிறகு இருளில்தானே கலந்துவிடவேண்டும். இருட்டில் இருக்கும் சுகம் சுகம்தான்! ‘சும்மா’ கண்ணை மூடிக்கொண்டிருந்தால்

எவ்வளவு காட்சிகளைக் காணலாம்! இருள் என்றால் ஒன்றும் கேவலம் அல்ல. ஒளியில், வெளிச்சத்தில் நடக்கும் வியாபாரத்தைவிட இருட்டில் நடக்கும் வியாபாரம்தான் மிகுதி என்று சில புள்ளிவிவரங்கள் கூறுகின்றனவாம். சரியோ, தப்போ எனக்குத் தெரியாது.

“மூலையில் இருக்கிறதே கடை, தெரியுமா?” என்று தகப்பனார் கேட்கின்றார். ஒருபிள்ளை “மூலையிலா அப்பா, எனக்குத் தெரியாதே” என்கிறான். இன்னொருவன் “எனக்குத் தெரியும் அப்பா” என்கிறான். “சரி அப்போ, நீபோ, இதை வாங்கிவா” என்று கடை அறிந்தவனிடம் வேலைவாங்குகின்றார். கடையைப்பற்றிய ‘அறியாமை’ உடையவன் தப்பித்துக்கொள்கிறான். இங்கே அறியாமையே, கடைக்குச் செல்லும் துன்பத்தைத் துடைக்கிறது அல்லவா? இதைப்போல் எத்தனையோ நேரங்களில் அறியாமை உதவுகின்றது. பத்திரிகையிலே செய்திவந்ததே, அதைப்பற்றி — என்ன சொல்கிறார்? என்று காரமான கேள்வி ஒன்றை ஒருவர் கேட்கின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள். “தெரியும்” என்று பதில்சொல்லிவிட்டால் “அதைப்பற்றிய கருத்து என்ன?” என்று அடுத்துக் கேட்பார்கள். அதனால் “தெரியாது” என்று முதலிலேயே பளிச்சென்று சொல்லிவிட்டால். அடுத்த கேள்விகளிலிருந்து தப்பித்துக்கொள்லாம். ஆகையால் அறியாமையில் சுகம் இருக்கிறதுதான்.

என்றாலும், சிலர் அறியாமையின் சுகத்தை அறியாமையால், அவர்கள் எதனையும் அறிந்துகொள்ள வேண்டும் என்று துடிக்கின்றனர். புதிது புதிதாகப் பலவற்றைத் தெரிந்துகொள்கின்றனர். ‘ஆகா நமக்கு இத்தனை தெரியும்’ என்று நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால் உண்மை என்ன தெரியுமா? ஒவ்வொரு முறையும் ஏதேனும் ஒன்றைத் தெரிந்துகொள்கிறோம் என்றால், உண்மையில் நாம் எதைத் தெரிந்துகொள்கிறோம், தெரியுமா? நம்முடைய அறியாமையைத்தான். ஆமாம் பாருங்கள்; எனக்கு இது வரையில் ‘வியட்நாம்’ என்றால் என்ன என்று தெரியாது என்று வைத்துக்கொள்ளுங்கள். தெரிந்த ஒருவரிடம் நான சென்று வியட்நாம் என்றால் என்ன என்று கேட்டு விளக்கம் பெறுவேன். வியட்நாம பற்றித் தெரிந்துகொள்வேன். ஆனால், வியட்நாம் பற்றி நான் தெரிந்துகொள்ளும் அதே நேரத்தில் இதுவரை வியட்நாம்பற்றி எனக்குத் தெரியாது என்பதையும் தெரிந்துகொள்கிறேன். அதாவது என்னுடைய அறியாமையை நான் அறிந்துகொள்ளுகின்றேன். இப்படி எத்தனைக்கெத்தனை நான் அறிகிறேனோ, அத்தனைக்கத்தனை, இதுவரை என்னிடம் அறியாமை இருந்தது என்பது விளங்குகின்றது! இது என்ன பிதற்றல் என்கிறீர்களா? இல்லை, உண்மைதான். திருவள்ளுவர் சொல்கிறார் “அறிதோறும் அறியாமை கண்டற்றால்” என்று சொல்கிறார். படிக்கப்படிக்க அறியாமையை அறிவதுபோல் என்று பொருள். ஆகையால் அறிந்தால், அறியப்படுவது அறியாமையே என்று கூறினால் என்னை அறியாதவன் என்னாதீர்!

பாடுபட்டு அறிந்தாலும், அது அளவிலே மிகுதியாக இருக்க முடியாது என்கிறார்கள். எவ்வளவுதான் படித்தாலும், இன்னும் படிக்க வேண்டியது ஏராளமாக இருக்குமாம். நம்மைப்போன்ற மனிதர்களுக்குமட்டும் என்று கருதாதீர்கள் கல்விக்குக் கடவுள் என்று சொல்கிறார்கள், அல்லவா, அந்தக் கலைமகளுக்கே இந்தக் கதைதானும். ஒளவையார், (அந்தச் சங்க காலத்து ஒளவையார் அல்ல. நேற்றோ அதற்கு முன்னாளோ, இருந்தாளே அந்தப் பிற்காலத்து ஒளவையார் சொல்கிறார்) “கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்று உற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்” என்று! கலைமடந்தையே, கைம்மண் அளவுதான் கற்க முடிந்தது, ஒளவையார் பாட்டுப் பாடுகின்ற காலம்வரை. கல்லாதது உலகளவு இருந்தது. இன்னும் இருக்கிறதோ என்னவோ, யார் யறிவார்? அவளே, இன்னும் உலகளவு கற்கவேண்டியிருக்கிறது என்றால், நாம் எவ்வளவு கற்க வேண்டுமோ? நினைத்காலே நடுக்கமாக இருக்கிறகா? அதனால்தான் நான் சொல்கின்றேன் அறியாமையே மேல் என்று!

ஆற்றலில்தானாகட்டும், அறிவை அறியாமைக்கே வலிவு மிகுதி என்பது உண்மை அறிவினால், அறியாமையைத் திருத்த முடியாது. ஆனால் அறியாமையோ அறிவையே மாற்றிவிடும்.

“காணாதான் காட்டுவான் தான்
காணான், காணாதான் கண்
டானும் தான் கண்டவாறு.”

என்னும் குறளில் “அறிவு இல்லாதவனுக்கு அறிவிப்பவன் தானே அறிவில்லாதவனாய் நிற்பான்” என்று கூறுகின்றார். அதாவது அறியாமையிடம் அறிவு செல்லுமானால், அறியாமையின் நிழல் அறிவின் மீதும் படும் என்கிறார். அகனால் அறியாமையே ஆற்றல் உடையது என்றேன், தவறா?

அறியாமையைப் பற்றி இவ்வளவு வாதிடுகின்றது என்னுடைய அறியாமையால்தான் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றேன்.

★

தமிழகத்தின்
புத்தம்புதுப் பொன்னி நதியாய்
புரட்சிப் புறநானூறாய்
விற்பனையாகிக்கொண்டிருக்கிறது!

போர்க்குரல்

(தி. மு. க. வார ஏடு)

ஆசிரியர்: புலவர் இளஞ்செழியன்

இதழுக்கு ரூ. 1 வீதம் முன்பணம் கட்ட முடிந்தோர் மட்டும்
விவரங்கட்கு 15 காசு ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

“போர்க்குரல்” 14, கீழரண்சாலை, திருச்சி-2.

சிந்தனைக்கு

சிறையில் சில கைதிகள் அடிக்கப்பட்டது உண்மை தான் என்றும், விரும்புகின்ற சட்ட மன்ற உறுப்பினர் எவரும் சிறைக்குச் சென்று அடி பட்ட கைதிகளைப் பார்க்கலாம் என்றும் கூறியதோடு சிறை அதிகாரிகளின் செயலுக்காக மன்னிப்பும் கேட்டுக்கொண்டார் இராஜஸ்தான் சிறை இலாகா அமைச்சர் திரு. மாதுர் அவர்கள். அதோடு ஒரு துணை ஜெயிலர், மூன்று தலைமை வார்டர்கள், 'சஸ்பெண்டு' செய்யப்பட்டனர். 'கான்விக்ட் வார்டர்கள்' பன்னிரண்டு பேர் சாதாரணக் கைதிகளாக்கப்பட்டனர்.

✻

இந்தியாவில் பதினுன்கு முக்கிய மொழிகள் இருக்கின்றன. அவற்றில் எதனையும் அதன் நிலையிலிருந்து அகற்ற முடியாது........இந்தி இல்லாமல் தான் குடியரசைப் பாதுகாக்க முடியும் என்று தெரியவந்தால், இந்தத் தியாகம் மனதை உடைத்துவிடும் என்றபோதிலும், குடியரசைக் காப்பாற்ற இந்தியை விட்டுக் கொடுப்போம் என்று இந்தி பேசுவோர் ஒவ்வொருவரும் கூறிக்கொள்ள வேண்டும். இந்தியாவில், இந்தி ஒருநாளும் ஆட்சி மொழியாக முடியாது.

—அலகாபாத், உயர்நீதி
மன்ற நீதிபதி
எஸ். எஸ். தவான்

✻

இருபத்து மூன்று வயதுடைய ஜோசி லாரஸ் என்ற பெயருடைய பிரஞ்சு நாட்டுப் பெண் ஒருத்தி மூன்று திங்கள் காரிருளில்கழித்துவிட்டு வெளி வந்தாள். 'தனிமை'யைப் பற்றிச் சோதனை செய்வதற்காக அவளை 240 அடி ஆழமுள்ள ஒரு குகையில் மூன்று திங்கள் அடைந்திருக்கச் செய்தனர். வெளிவந்தபோது அவள் "நான் சோதனையில் வென்று வந்தது குறித்து மிக்கமகிழ்ச்சியடைகின்றேன். நான் உணர்வுகளை இழந்துள்ளேன்." என்று கூறினுர். இந்த மூன்று திங்களில் அவளுக்குத் துணையாக இருந்தது ஒரு வெள்ளெலிதான்!

✻

ஆங்கில உபயோகத்தை எதிர்த்துநடக்கும் வெளிநடப்புகளும், காட்டமான ஆட்சேபங்களும், நமக்குப் பெருமையளிக்கத் தக்கவை அல்ல.... ஆர்ப்பாட்டங்கள், உண்ணு விரதம், தீக்குளிப்புகள் மூலம் தெரிவிக்கப்படும் கடும் ஆட்சேபங்களை ஆட்சியாளர்கள் குறைத்துக் கூறுவதைக் கண்டு வருந்துகின்றேன்........

அரசியலமைப்பு சட்டத்தில் இருக்கிறது என்பதற்காக ஆட்சிமொழியாக இந்தியைத் திணிப்பதில் நாம் மெதுவாகச் செல்லாதிருந்தால் எதிர்காலம் இருண்டிருக்கும். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி விரைவில் மடியும் எனக் கண்களைமூடிக்கொண்டு கற்பனை செய்யாதிருப்போம் ....உலகில் அநேகமாக ஒவ்வொரு நாடும் ஆங்கிலத்தைக் கற்கும்போது, அதை இந்தியாவிலிருந்து விரட்ட ஆங்கில வெறுப்பாளர்கள் ஏன் விரும்ப வேண்டும்?

—ஜெனரல் கரியப்பா.

✻

பணவீக்கம் தவிர்க்க முடியாதது என்றபோதிலும், சென்ற ஆண்டுகளில் விலைகள் 127·4 என்ற அளவிலிருந்து 160 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இது 1962-ஆம் ஆண்டோடு முடிந்த 18 ஆண்டுகளில் ஏற்பட்ட மொத்த உயர்வைவிட மிகுதியானது. இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இப்படி விலை உயர்வு ஏற்பட்டிருப்பது கவலை தருவதாகும். மேலும் ஆடம்பரப் பொருள்களைவிட உணவுப் பொருள்களிலேயே இந்த விலை உயர்வு காணப்படுவதால், இதுஇந்திய சமுதாயத்தின் அடிப்படையையே பாதித்து விடக்கூடும்.

—எச். ஆர். வி. அய்யங்கார்.

✻

எழுத்தாளனுக்கு இரண்டு வகையான அநுபவங்கள் ஏற்படும். ஒன்று, நூல்கள் வாயிலாகஏற்படுவது; இன்னென்று, நேரிடைத் தொடர்பாலும், வாழ்க்கைத்தொடர்பாலும் ஏற்படுவது முதல் வகை அநுபவமானது கச்சாப் பொருளைப் போன்றது. இரண்டாவது வகையானது சுத்தப்படுத்தாத மூலப்பொருள். தெளிவாகச் சொல்வதானுல், முதல் வகைமான் ஒன்றனைப் பார்ப்பதும், இரண்டாவது வகைமான் தோலைப் பார்ப்பதும் ஆகும். இந்த இருவகை அநுபவங்களையும் நன்ருக உணர்ந்து, என் சிந்தனையோடு சேர்த்து அவற்றை எனதாக்கிக் கொள்கிறேன். பிறகு வெளியிட வேண்டும் என்ற வேகம் தோன்றியதும்; அதனை என் சாதனையாக்குகின்றேன்.

—மாக்ஸிம் கார்க்கி.

✻

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணுதுரை.